DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 367/2016

List of Witness : Lw3

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாப்பாத்தி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனிச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 07/07/2025

(எதிரிகள் ஆஜர்)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் இடும்பகுடும்பன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்கள் இருக்கும் தேதி சரியாக ஞாபகம் இல்லை. இரவு 9.00 மணி இருக்கும். சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தபோது தங்கராஜ் என்பவரை 6,7 நபர்கள் சேர்ந்து அடித்து கொண்டிருந்தார்கள். தங்கராஜை ஆஜர் எதிரிகள் தான் அடித்து கொண்டு இருந்தார்கள். நான் வந்து விலகிவிட்டு தங்கராஜை தூக்கி உட்கார வைத்து அவருக்கு தண்ணீர் கொடுத்து ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். ஆஜர் எதிரிகள் கம்பி, கம்பு போன்ற ஆயுதங்கள் வைத்து தங்கராஜை அடித்தார்கள். யார் யார் என்ன என்ன ஆயுதங்கள் வைத்து இருந்தார்கள் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. தங்கராஜுக்கு தலை, கை, கால்களில் பலத்த ரத்தக்காயங்கள் ஏற்பட்டு மூச்சு பேச்சு இன்றி போய்விட்டார்.அதனால் தான் ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். சம்பவம் தொடர்பாக தங்கராஜ் அம்பிளிக்கை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் சண்டை நடந்த பிறகு எப்போது விசாரித்தார்கள் என்றால் சண்டை நடந்து ஒரு மணி நேரத்தில் வந்து விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்தபோது 6,7 நபர்கள் அடித்தாக சொல்லியுள்ளேன் என்றால் பெயர் சொல்லி சொன்னேன். நான் சொல்வதுபோல் தங்கராஜை யாரும் தாக்கவில்லை என்றாலும், அவராக கீழேவிழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. என் தம்பி எத்தனை நபர்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் 7 நபர்கள் மீது புகார் கொடுத்தார்.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.07.07 17:36:55 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 07/07/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate  At Oddanchatram

Case No : CC 367/2016

List of Witness : Lw5

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பொன்னுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :-   07/07/2025

(எதிரிகள் ஆஜர்)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் இடும்பகுடும்பன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இந்த கையொப்பத்தை நான் எப்போது எங்கு வைத்து எதற்காக செய்து கொடுத்தேன் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி  கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரிகள் எனது உறவினர்களா என்றால் ஆமாம். எனது உறவினர்கள் தான். கடந்த 05.06.2013 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு நானும், ஆறுமுகம் என்பவரும் எங்கள் ஊர் தங்கராஜ் வீட்டின் வழியாக சென்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது அம்பிளிக்கை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண் 57/2013 வழக்கின் சம்பவ இடத்தை எங்கள் இருவர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் அதில் நானும், ஆறுமுகமும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார்

விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதாலும் ,பல வருடங்கள் ஆனதால் நினைவில் இல்லை என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN
Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.07.07 17:37:01 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 07/07/2025